செய்தி வெளியீடு எண்: 848 நாள்:09.11.2020

## செய்தி வெளியீடு

மாண்புமிகு உயர்கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் இன்று தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, வேளாண்மை பொறியியல் துறை மற்றும் சர்க்கரைத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகளின் செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து இன்று (9.11.2020) தலைமைச் செயலகத்தில் ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வின் போது, விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக 2020–21ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவை விதி எண்.110ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மற்றும் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பல்வேறு அறிவிப்புகளின் தற்போதைய நிலையைக் கேட்டறிந்தார்கள். இதனைத் தொடர்ந்து, திட்டங்களை மேலும் வெற்றிகரமாக செயல்படுத்தி வேளாண் பெருமக்கள் பயன்பெறும் வகையில் துறை அலுவலர்கள் பணியாற்றுவது குறித்து பல்வேறு ஆக்கபூர்வமான அறிவுரைகளை வழங்கினார்கள்.

வேளாண்மைத் துறையில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் பிற திட்டங்கள் மற்றும் அவற்றில் எட்டப்பட்ட சாதனைகள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்கள். தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கிய திட்டமான நுண்ணீர்ப் பாசனம்,

**மகத்துவ மையங்கள், தேசிய தோட்டக்கலை இயக்கம், தோட்டக்கலை விளைபொருட்களை மதிப்பு கூட்டு பொருளாக மாற்றி சந்தைப்படுத்துதல், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, வேளாண்மை பொறியியல் துறை மற்றும் சர்க்கரைத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு துறைத் தலைவர்களால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.**

**இந்நிகழ்வின் போது, வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் திரு.எஸ்.ஜெ. சிரு, இ.ஆ.ப., சர்க்கரைத் துறை ஆணையர் திரு.ஆர்.ஆனந்தகுமார், இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப., வேளாண்மை பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் முனைவர் ஆர்.முருகேசன், மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.**

***

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**